4. தகவல் கோரல்.

சமூகநலத்துறை, ஊரகப்பணித்துறைப் பெண்கள் ஊர்வலம்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சமூக நலத் துறை, ஊரகப்பணித்துறையைச் சேர்ந்த பெண்கள் தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஊர்வலம் வரும்போது அநேகர் கைது செய்யப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சபையில் இருக்கிறார்கள், அதுபற்றி ஏதாவது சொல்ல முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து, முன்னறிவிப்பு இன்றி இப்படி அவையில் எழுப்பக் கூடாது. உறுப்பினர் அவர்களுக்கு உள்ளபடியே அக்கறை இருந்தால் சமூகநலத்துறை அமைச்சர் அவர்களைத் தனியாகப் பார்த்து சம்பந்தப்பட்டவர்களையும் அழைத்து வந்து விண்ணப்பம் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கலாம். அதல்லாமல் இங்கே இப்படி திடீரென்று முன்னறிவிப்பின்றி பிரச்னையை எழுப்புவதால் என்ன பயன் ஏற்படப்போகிறது ?

5. வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,81,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,81,64,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகள் நகராட்சி நகரங்களை மட்டும் இணைக்கும் வழித்தடங்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையைத் தளர்த்தி வட்டத் தலைநகரங்களையும் மக்கள்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS